முறைப் படுத்தும் நிலை ஏற்படவில்லை. இந்நிலை எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும் என்ற இந்த அறிவிப்போடு இந்த அறிக்கையோடு நேற்றைய தினம் நான் இது தொடர்பாக தந்த உறுதியின்படி இதைப் பரிசிலிக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

(2) சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர். சி. பிளாண்ட் ரசாயனக் கழிவு நீரால் தோட்டக் காடுகள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்படுவதோடு வீரக்கல்புதூர் ஊராட்சிப் பகுதிகளில் விவசாயக் கிணறுகளும் பாதிக்கப்படுவது குறித்து.

(பிற்பகல் 5-10)

திரு. ஆ. நல்லசிவம்: தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர். சி பிளாண்ட், ரசாயனக் கழிவு நீரால் ஊற்றுநீர் கெட்டுத் தோட்டக்காடுகளில் உள்ள மரங்கள் பட்டுப் போவதோடு, பயிர்கள் முளைக்காத சதுப்பு நிலமாக மாறியதால் வீரக்கல்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விவசாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டதோடு, அப்பகுதி சதுப்பு நிலமாக மாறி வருவது குறித்து''

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

''சேலம் மாவட்டத்தில் உள்ள கெம்பிளாஸ்ட் கம்பெனி மற்றும் மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் இரசாயனக் கழிவு நீரால் பி. என். பட்டி, வீரக்கல்புதூர் ஆகிய ஊர்களிலுள்ள கிணறுகளின் நீர் பாதிக்கப்பட்டுள்ளது. அவ்வூர் மக்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் மேற்சொன்ன கிணறுகள் ஆய்வு செய்யப்பட்டன என்று பொதுசுகாதாரம், தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆய்வு செய்யப்பட்ட 294 கிணறுகளில் 187 மண்ணிட்டு மூடப்பட்டுவிட்டன. இப்போது பயன்படுத்தப்பட்டு வரும் 107 கிணறுகளுள் பாசனக் கிணறுகள் 27 பருகு நீர்க் கிணறுகள் 80 ஆகும். பாசனக் கிணறுகள் 27-ல் 5 கிணறுகள் பயன்படுத்தத் தக்கனவாகவும், 2 கிணறுகள் பொறுத்துக் கொள்ளத் தக்கனவாகவும் உள்ளன. மீதம் 20 கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றன. பருகுநீர்க் கிணறுகள் 80ல் 16 கிணறுகள் பயன்படுத்தத் தக்கனவாகவும் 6 பொறுத்துக் கொள்ளத் தக்கனவாகவும் உள்ளன. மீதம் 58 கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றன. தண்ணீரின் தரத்தைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதற்காக, பயன்படுத்தத் தகுதியற்ற

கிணற்று நீரை முழுவதுமாக வெளியே இறைத்து விடுதல், இறைக்கப்பட்ட நீர் கிணறுகளின் அருகில் தேங்காமல் தவிர்த்தல் முதலான தீர்வு நடவடிக்கைகள் கடைப்பிடிக்கும்படி இயக்குநர் எடுத்துக் கூறியுள்ளார்.

கெம்பிளாஸ்ட் கம்பெனி மற்றும், மேட்டூர் கெமிக்கல் கம்பெனி ஆகியவை தமது செலவில் காவேரியிலிருந்து இக் கிராமங்களுக்கு, வீட்டுக் குழாய்கள், பொதுக்குழாய்கள் வழியாக நாளொன்றுக்கு 5 மணி நேரம், மருந்திட்டு சுத்தம் செய்யப் பட்ட 10,000 காலன் தண்ணீர் வழங்குகின்றன.

கெம்பிளாஸ்ட் கம்பெனி சுற்றுப்புறத்தில் காற்றுத் தூய்மை கெடுதல் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு, புகைக்கூம்பு குறைந்தது 50அடி உயரத்துக்கு அமைக்குமாறு கம்பெனிக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. கழிவு நீரை முடிவு செய்யவும், தேவை யான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கம்பெனி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. கழிவு நீரை முடிவு செய்யுமிடங்களுக்கு அப்புறப் படுத்துவதற்கு மூடிய குழாய்களைப் பயன்படுத்துமாறும் சேலம் மாவட்ட நல்வாழ்வு அலுவலர் தொழிற்சாலைக்கு அறிவுறுத்தி யுள்ளார். தடுப்பு நடவடிக்கைகளை விரைவில் முடிப்பதற்காகத் தொழிற்சாலையை வலியுறுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப் பட்டுள்ளது.

தடுப்பு நடவடிக்கைகளின் திறனைச் சரி பார்க்கத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இயக்குநர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு நீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியம் இக்கிராமங் களுக்குப் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்குவதற்கான திட்டத்தை 25 லட்ச ரூபாய் செலவில் நிறைவேற்றி வருகிறது.

திரு. ஆ. நல்லசிவம் : குடிதண்ணீரைப் பொறுத்தவரை, அதற்குப் பாதுகாப்பு கொடுத்திருந்தாலும்கூட ரசாயனக் கழிவு நீர் வெளியே வருவதால், நிலங்கள் சதுப்பு நிலங்களாக மாறு வதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். இரசாயனக் கழிவு நீரை சுத்தப்படுத்தி அனுப்பும் இயந்திரங்களை வைத்து. அவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட நீரை வெளியே விடுகிற நிலைமையை நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி கம்பெனியும், விக்ரமசிங்கபுரம், மதுரை கோட்ஸ் கம்பெனியும் உருவாக்கியிருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட முறையை மேட்டூர் கெம்பிளாஸ்ட் கம்பெனியும் மேற்கொள்ள வேண்டும், இரசாயனக் கழிவுநீரைச் சுத்தப்படுத்தி வெளியேற்ற வேண்டுமென்று அரசாங்கம் அந்தக் கம்பெனியை நிர்ப்பந்தப்படுத்துமா? அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் போதே இதை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

 சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர்.சி. பிளாண்ட் ரசாயனக் கழிவுநீரால் தோட்டக்காடுகள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்படுவதோடு வீரக்கல்புதூர் ஊராட்சிப் பகுதிகளில் விவசாயக் கிணறுகளும் பாதிக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நிறுவனம் கேட்டுக்கொள்ளப்படும்.

திரு. ஆ. நல்லசிவம் : அங்கே உள்ள நிலங்கள் சதுப்பு நிலங்களாக மாறிக்கொண்டு வருகிற காரணத்தால், அந்த நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். சௌந்தரராஜன் : சதுப்பு நிலங்களை மீண்டும் பயிர் செய்ய ஏற்ற நிலங்களாக மாற்ற ஏதாவது வழி வகை இருக்கின்றதா என்று ஆராயப்படும்.

7. அரசின் தீர்மானங்கள்.

(1) மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை உயர்த்துதல் குறித்து.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961), 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன், நடுத்தரக்காலக் கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத உயரளவு வரையறையை முறையே ரூ. 250 இலட்சம், ரூ. 1,490 இலட்சம், ரூ. 7,400 இலட்ச அளவிற்கு கூட்டுறவுத் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளதாலும்,

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தர கால மாற்று வசதி கடனுக்கான உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 10.900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்,

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை